அன்பார்ந்த பிஸ்னஸ் பேங்கிங் வாடிக்கையாளர்களுக்கு,

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அனுசரித்து உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கியியல் உற்பத்திகளை/சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

இம் முக்கிய விடய ஆவணமானது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் பிஸ்னஸ் பேங்கிங் சேவைகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற முன்மொழிவு பற்றிய பரந்த விளக்கவுரையைத் தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக கீழே முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்குட்படலாம் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின் பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது +94(0)114 682 555 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக 24 மணி நேர அழைப்பு நிலையம்.

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில் தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை customerservice@nationstrust.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக [+94(0)11 4711411] எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

<table>
<tr><th>கணக்கு பற்றிய விபரம்</th><th>வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்</th><th>கட்டணங்களும் வேறு வங்கி அறவீடுகளும்</th><th>கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்</th><th>முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும்</th></tr>
<tr><td colspan="5">நேஷன்ஸ் ட்ரஸ்ட் பிஸ்னஸ் பேங்கிங் என்பது உயர் செயலாற்றுகைமிக்க வர்த்தக வாடிக்கையாளர்களுக்கென உயர் தரத்திலான தீர்வுகளை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட உற்பத்தியொன்றாகும். இவ்வுற்பத்தி மூன்று வகுதிகளை/உறுப்புரிமைகளை கொண்டதாகும் அவை: பிளாட்டினம், கோல்ட் மற்றும் சில்வர் என்பனவாகும்.</td></tr>
<tr><td colspan="5">சில்வர் உறுப்புரிமை</td></tr>
<tr>
<td>வாடிக்கையாளர் புதிதாக உருவாகின்ற தொழில்முயற்சியாளரோ அல்லது ஏற்னவே தொழிலில் உள்ளவரோ எதுவாயினும், எந்தவொரு விரைவான நிதியியல் முதலீட்டுக்குமான தீர்வுகள் எம்மிடமுண்டு.</td>
<td>சேவை நன்மைகள்<br>- 24 மணி நேர பிரத்தியேகமான உடனடி அழைப்பு வசதி<br><br>கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளல்<br>- FriMi, அமெரிகன் எக்ஸ்பிரஸ் இணையவழிக் கொடுப்பனவு வாயில் (IPG) மற்றும் விற்பனை மையங்கள்( POS) ஊடாக கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளும் வசதி<br><br>டிஜிடல் வங்கிச்சேவை சலுகைகள்<br>- நேஷன்ஸ் டிரெக்ட் என்டர்பிரைசஸ் (NDE) உடன் இணைவதற்கு 50% இணைவுக் கட்டணம் தள்ளுபடி<br><br>- முதல் வருடத்திற்கு இலவச இணைய வங்கிச்சேவை/மொபைல் வங்கிச்சேவை /FriMi (தனிப்பட்ட கணக்குகளைக்கொண்ட பிஸ்னஸ் பேங்கிங் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் இச்சேவைகள் கிடைக்கப்பெறும்)</td>
<td>வரவில் அல்லது பற்றில் மாதாந்த சராசரி மீதி ரூ. 25,000 ஐ விடக் குறைவு<br>- ரூ. 2,500/- கொண்ட குறைந்தபட்ச மீதி பேணும் கட்டணம்<br><br>- கருமபீடத்திலான கொடுக்கல்வாங்கல் எண்ணிக்கை (நிதிப்பரிமாற்றல்கள்) 25 ஐ விட அதிகமாயின், ரூ. 2,500/-. கொடுக்கல்வாங்கல் கட்டணம் அறவிடப்படும்.<br><br>வரவாயினும் அல்லது பற்றாயினும் ரூ. 25,000 - ரூ. 499,000 இற்கு இடைப்பட்ட மாதாந்த சராசரி மீதி<br>- கருமபீடத்திலான கொடுக்கல்வாங்கல் எண்ணிக்கை (நிதிப்பரிமாற்றல்கள்) 25 ஐ விட அதிகமாயின், ரூ. 1,000/-. சேவைக் கட்டணம் அறவிடப்படும்.<br>-<br><br>முன்னுள்ள நிரலில் 'நன்மைகள்' இன் கீழ் விவரிக்கப்பட்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு</td>
<td>- உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட வியாபார நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கும் படிவம்.<br><br>- செல்லுபடியான வியாபார பதிவுச் சான்றிதழ் மற்றும் வங்கியினால் கருதக் கூடியவாறான ஏனைய தேவைப்படும் ஆவணங்கள்<br><br>- ரூ.50,000/- ஆரம்ப வைப்பு<br><br>- ரூ. 25,000/- குறைந்தபட்ச மாதாந்த சராசரி மீதியைப் பேணுதல்<br><br>- வியாபார நடைமுறை/சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதன் மூலம் வாடிக்கையாளரொருவர் சில்வர் உறுப்புரிமையினை பெற்றுக்கொள்கின்றார் கணக்கின் போக்கினைச் சார்ந்து (வியாபார நடைமுறைக் கணக்கில் செயற்பாடுகள், அளவுகள்) வாடிக்கையாளர் கோல்ட் மற்றும் பிளாட்டினம் அந்தஸ்த்துகளுக்கு தரமுயர்த்தப்படுவார்.</td>
<td>- நடைமுறைக்கணக்கில் ரூ. 25,000 – 499,999 இற்கு இடையில் சராசரி வரவு மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- சேமிப்புக் கணக்கில் ரூ. 1,000 – 9,999,999 இற்கு இடையில் சராசரி மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- மாதமொன்றிற்கு ரூ. 25,000 – 9,999,999 இற்கு இடையில் சராசரி பற்று மீதியினைப் பேணுதல்</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | - குறுந்தகவல் விழிப்பூட்டல் வசதி<br><br>கொடுக்கல்வாங்கல்சார்ந்த சலுகைகள்<br>- பணம் சேகரிப்பு சேவை | வங்கியின் வழமையான கட்டணங்களும் அறவீடுகளும் ஏற்புடையதாகவிருக்கும். | | |
| **கோல்ட் உறுப்புரிமை** | | | | |
| கனவுகளை நனவாக்கும் வியாபாரத்தை நாம் முன்னெடுக்கின்றோம். அது எதுவானாலும் உங்களது தொழிலை முன்னெடுப்பதற்கு வாடிக்கையாளருக்கு தேவையானதை வழங்குவதற்கு பொருத்தமான அனைத்து உபாயங்களும் எம்மிடமுண்டு. | சேவை நன்மைகள்<br><br>- தொடர்புகொள்வதற்கு பிரத்தியேகமான அலுவலர்<br>கடன் நன்மைகள்<br>- கவர்ச்சிகரமான கடன்வசதிப் பொதிகளுடன் கூடிய வியாபார முற்பணம்* வங்கியின் நியம கடன் மதிப்பீட்டு மற்றும் அனுமதிக்கப்பட்ட கடன் மற்றும் உற்பத்திக் கொள்கைகளுக்குட்பட்டது.<br><br>கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளல்<br>- FriMi, அமெரிகன் எக்ஸ்பிரஸ் இணையவழிக் கொடுப்பனவு வாயில் (IPG) மற்றும் விற்பனை மையங்கள்( POS) ஊடாக கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளும் வசதி<br><br>- அமெரிகன் எக்ஸ்பிரஸ் இணையவழிக் கொடுப்பனவு வாயிலுக்கு (IPG) விசேட கழிவு வீதங்கள்.<br>டிஜிடல் வங்கிச்சேவை சலுகைகள் | - சேவைக் கட்டணங்கள் ஏற்புடையதல்ல<br><br>- முன்னுள்ள நிரலில் 'நன்மைகள்' இன் கீழ் விவரிக்கப்பட்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு வங்கியின் வழமையான கட்டணங்களும் அறவீடுகளும் ஏற்புடையதாகவிருக்கும். | - மேற்குறித்த விதத்தில் | நடைமுறைக்கணக்கில் மாதமொன்றிற்கு ரூ. 500,000 – 4,999,999 இற்கு இடையில் சராசரி வரவு மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- சேமிப்புக் கணக்கில் மாதமொன்றிற்கு ரூ. 10 மில்லியன் தொடக்கம் 14,999,999 இற்கு இடையில் சராசரி மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- மாதமொன்றிற்கு தொழிற்படு மூலதன வசதிகளில் ரூ. 10 மில்லியன் தொடக்கம் 19,999,999 இற்கு இடையில் சராசரி பற்று மீதியினைப் பேணுதல், (பற்று மீதிகளுக்காக, 12 மாதங்களுக்கு மேற்பட்ட கடன் காலத்துடனான நீண்ட காலக் கடன்கள் நீங்கலாக மேலதிகப் பற்று, இறக்குமதி நிதியிடல் கடன்கள், குறுகிய காலக் கடன்கள், ஏற்றுமதி தயார்படுத்தலுக்கான கடன்கள் என்பன கருத்திற்கொள்ளப்படும்)<br><br>அல்லது |

| | | | | |
|---|---|---|---|---|
| | - நேஷன்ஸ் டிரெக்ட் என்டர்பிரைசஸ் (NDE) உடன் இணைந்துகொள்ள 75% இணைவுக் கட்டணம் தள்ளுபடி<br><br>- முதல் வருடத்திற்கு இலவச இணைய வங்கிச்சேவை/மொபைல் வங்கிச்சேவை /FriMi (தனிப்பட்ட கணக்குகளைக்கொண்ட பிஸ்னஸ் பேங்கிங் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் இச்சேவைகள் கிடைக்கப்பெறும்)<br>- முதல் வருடத்திற்கு இலவச குறுந்தகவல் விழிப்பூட்டல் வசதி<br><br>கொடுக்கல்வாங்கல்சார்ந்த சலுகைகளை<br>- பணம் சேகரிப்பு சேவை<br><br>- காசோலை வைப்பு திரும்பல் தரகு தள்ளுபடி<br><br>- இலவச வரையறையற்ற வர்த்தக நாமமிடப்பட்ட காசோலைப் புத்தகம்<br><br>- சேவைக்கட்டணங்கள் தள்ளுபடி- குறைந்தபட்ச மீதி மற்றும் கொடுக்கல்வாங்கல் சார்ந்தவை<br><br>வர்த்தக சலுகை(நாட்டில் நிலவும் தற்போதய நிலைமை காரணமாக மறு அறிவித்தல் வரை பினவரும் | | | - ரூ. 35 மில்லியன் கொண்ட இறக்குமதி அத்துடன்/ அல்லது ஏற்றுமதி காலாண்டு அளவினை பேணுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சலுகைகள் எந்தவோரு வாடிக்கையாளருக்கும் ஏற்புடையதாகாது)<br>- ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான (DA) இறக்குமதி ஆவண சேகரிப்புப் பட்டியல்கள் - 0.35% தரகு<br><br>- இறக்குமதி நாணயக் கடிதம், கொடுப்பனவுகளுக்கெதிரான (DP) ஆவண சேகரிப்பு பட்டியல்கள் - 0.25%தரகு<br><br>முக்கிய தொழில் ஆட்களுக்கான சலுகைகள்<br>- கடன்கள் (தனிப்பட்ட/வீடமைப்பு) மற்றும் குத்தகை உற்பத்திகளுக்கு முன்னுரிமை விதங்கள்<br><br>- ரூ. 250,000 இற்கு மேற்பட்ட வரையறையுடன் AMEX பிளாட்டினம் அல்லது MasterCard World தனிப்பட்ட கடனட்டை இணைவுக்கட்டணத் தள்ளுபடியுடன். ஆயினும் தொடர்புக் காலம் 3மாதங்களுக்கு மேல் இருக்க வேண்டும் - கடன்மதிப்பீட்டுக்குட்பட்டது<br><br>- MasterCard World கடனட்டைக்கு விமானநிலைய விசேட அதிதி நுழைவு- கடனட்டைக்கு அதிதிநுழைவு வசதி இயலச்செய்யப்படும். உபயோகப்படுத்தலுக்கான வாடிக்கையாளரிடமிருந்து | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டணம் அறவிடப்படும். | | | |
| **பிளாட்டினம் உறுப்புரிமை** | | | | |
| எமது பிஸ்னஸ் பேங்கிங் பிளாட்டினம் உறுப்புரிமை பற்றிய அனைத்தும், வாடிக்கையாளரின் வாழ்க்கைமுறையை நிருவகிப்பதும், அதேபோன்று வேண்டப்படும் எந்நேரத்திலும் அவர்களுக்கு சேவை வழங்கத் தயாராகவிருப்பதுமேயாகும். | சேவை நன்மைகள்<br>- தொடர்புகொள்வதற்கு பிரத்தியேகமான அலுவலர்<br><br>கடன் நன்மைகள்<br>- கவர்ச்சிகரமான கடன்வசதிப் பொதிகளுடன் கூடிய வியாபார முற்பணம்* வங்கியின் நியம கடன் மதிப்பீட்டு மற்றும் அனுமதிக்கப்பட்ட கடன் மற்றும் உற்பத்திக் கொள்கைகளுக்குட்பட்டது.<br><br>கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளல்<br>- FriMi, அமெரிகன் எக்ஸ்பிரஸ் இணையவழிக் கொடுப்பனவு வாயில் (IPG) மற்றும் விற்பனை மையங்கள்( POS) ஊடாக கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளும் வசதி<br><br>- இணையவழிக் கொடுப்பனவு வாயிலுக்கு (IPG) விசேட கழிவு வீதங்கள்.<br><br>டிஜிடல் வங்கிச்சேவை சலுகைகள்<br><br>- நேஷன்ஸ் டிரெக்ட் என்டர்பிரைசஸ் (NDE) மீது 100% இணைவுக் கட்டணம் தள்ளுபடி<br><br>- முதல் வருடத்திற்கு இலவச இணைய | - சேவைக் கட்டணங்கள் ஏற்புடையதல்ல<br><br>- முன்னுள்ள நிரலில் 'நன்மைகள்' இன் கீழ் விவரிக்கப்பட்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு வங்கியின் வழமையான கட்டணங்களும் அறவீடுகளும் ஏற்புடையதாகவிருக்கும். | - மேற்குறித்த விதத்தில் | - நடைமுறைக்கணக்கில் மாதமொன்றிற்கு ரூ. 5 மில்லியனுக்கு மேல் சராசரி வரவு மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- சேமிப்புக் கணக்கில் மாதமொன்றிற்கு ரூ. 15 மில்லியனுக்கு மேல் சராசரி மீதியினைப் பேணுதல் அல்லது<br><br>- மாதமொன்றிற்கு தொழிற்படு மூலதன வசதிகளில் ரூ. 20 மில்லியனுக்கு மேல் சராசரி பற்று மீதியினைப் பேணுதல், (பற்று மீதிகளுக்காக, மேலதிகப் பற்று, இறக்குமதி நிதியிடல் கடன்கள், குறுகிய காலக் கடன்கள், ஏற்றுமதி தயார்படுத்தலுக்கான கடன்கள் என்பன கருத்திற்கொள்ளப்படும். 12 மாதங்களுக்கு மேற்பட்ட கடன் காலத்துடனான நீண்ட காலக்கடன்கள் நீங்கலாக) அல்லது<br><br>- ரூ. 65 மில்லியன் கொண்ட இறக்குமதி அத்துடன்/ ஏற்றுமதி அல்லது காலாண்டு அளவினை பேணுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கிச்சேவை/மொபைல் வங்கிச்சேவை /FriMi (தனிப்பட்ட கணக்குகளைக்கொண்ட பிஸ்னஸ் பேங்கிங் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் இச்சேவைகள் கிடைக்கப்பெறும்)<br><br>- முதல் வருடத்திற்கு இலவச குறுந்தகவல் விழிப்பூட்டல் வசதி<br>-<br><br>கொடுக்கல்வாங்கல்சார்ந்த சலுகைகளை<br>- பணம் சேகரிப்பு சேவை<br><br>- காசோலை வைப்பு திரும்பல் தரகு தள்ளுபடி<br><br>- இலவச வரையறையற்ற வர்த்தக நாமமிடப்பட்ட காசோலைப் புத்தகம்<br><br>- இலவச வரையறையற்ற வரைவுகள்/நிலையியல்க் கட்டளைகள்<br><br>- சேவைக்கட்டணங்கள் தள்ளுபடி- குறைந்தபட்ச மீதி மற்றும் கொடுக்கல்வாங்கல் சார்ந்தவை<br><br>வர்த்தக சலுகை(நாட்டில் நிலவும் தற்போதய நிலைமை காரணமாக மறு அறிவித்தல் வரை பினவரும் சலுகைகள் எந்தவோரு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாடிக்கையாளருக்கும் ஏற்புடையதாகாகது)<br>- ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான (DA) இறக்குமதி ஆவண சேகரிப்புப் பட்டியல்கள் - 0.30% தரகு<br><br>இறக்குமதி நாணயக் கடிதம், கொடுப்பனவுகளுக்கெதிரான (DP) ஆவண சேகரிப்பு பட்டியல்கள் - 0.175%தரகு<br><br>- தந்தி மாற்ற்றல்(TT) மற்றும் வெளிமுக தந்தி மாற்றல் (OTT) கொடுப்பனவுகள் மீது 10% கழிவு (தரகு மீதான 0.15% கழிவுசெய்யப்பட்ட வீதத்தினை பிரயோகித்து)<br><br>முக்கிய தொழில் ஆட்களுக்கான சலுகைகள்<br>- வைப்பு (வெளிநாட்டு நாணய வைப்பு மற்றும் விசேட சேமிப்புகள் உள்ளடங்கலாக), கடன்கள் (தனிப்பட்ட/வீடமைப்பு) மற்றும் குத்தகை உற்பத்திகளுக்கு முன்னுரிமை விதங்கள்<br><br>- ரூ. 250,000 இற்கு மேற்பட்ட வரையறையுடன் AMEX பிளாட்டினம் அல்லது MasterCard World தனிப்பட்ட கடனட்டை இணைவுக்கட்டணத் தள்ளுபடியுடன். ஆயினும் தொடர்புக் காலம் 3மாதங்களுக்கு மேல் இருக்க வேண்டும் - | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன்மதிப்பீட்டுக்குட்பட்டது<br>-<br>* கட்டணத்தள்ளுபடிகள் Explorer இற்கு வழங்கப்படாது.<br><br>- நிறுவன அட்டைகள், எரிபொருள் அட்டைகள் சிறுநிதி அட்டைகள் மற்றும் செலவு அளவு அடிப்படையிலமைந்த தன்னியக்க கட்டணப்பட்டியல் தீர்ப்பனவுகளுக்கு (ABS) முன்னுரிமை வீதங்கள்<br><br>- விமானநிலைய விசேட அதிதி நுழைவு - MasterCard World அல்லது அமெக்ஸ் பிளாட்டினம்/ Explorer கடனட்டைகளுக்கு முன்னுரிமை நுழைவுச்சீட்ட வழங்கப்படும். உபயோகப்படுத்தலுக்கான வாடிக்கையாளரிடமிருந்து கட்டணம் அறவிடப்படும். | | | |

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியானது பிஸினஸ் டுடே சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்டவாறு இலங்கையில் முதல் 15 வியாபார நிறுவனங்கள் மத்தியில் காணப்படுகின்றது. ‘‘மக்களின் இலக்குகளையும் அபிலாசைகளையும் நிலைபெறத்தக்க வழியில் அடைந்துகொள்வதற்கு நிதியியல் சேவைகளையும் தகவல்களையும் வழங்குவதன் வாயிலாக மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவுதல்’’ என்ற அதன் தொலைநோக்கிலிருந்து உருவாகி, வங்கித்தொழில், மற்றும் நிதியியல் உற்பத்திகள் அத்துடன் சேவைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒப்பற்ற நிதியியல் துறைப் பட்டியல்களுடன் வாடிக்கையாளர்கள், வர்த்தகம் மற்றும் நிறுவன வகையினைக் கொண்ட பல்வேறு வாடிக்கையாளர் வகுப்பினருக்கு வங்கி சேவையாற்றுகின்றது. அதி நவீன வங்கித்தொழில் தொழில்நுட்பங்கள் ஊடாக டிஜிடல்ரீதியான வலுவூட்டலை வலுவாக மையப்படுத்தி, வங்கியானது நீடிக்கப்பட்ட வங்கிச் சேவை நேரங்கள், 365 நாள் வங்கிச்சேவை, இலங்கையின் முதல் டிஜிடல் வங்கியான FriMi போன்ற பல புத்தாக்கமிக்க வாடிக்கையாளரை மையப்படுத்திய வங்கித்தொழில் தீர்வுகளில் வங்கி முன்னோடியாக விளங்குகின்றது. அதன் அட்டை உறுப்பினர்களுக்கு முதன்மைப் பெறுமதி மற்றும் சேவையினை வழங்கி வெகுமதியளிக்கும் அனுபவத்துடனும் வாய்ப்புகளுடனும் இணைக்கின்றது. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலங்கையில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டைகளின் வழங்குநரும் ஏக ஏற்பவருமாகும். வங்கி, நாடுபூராகவும் 96 கிளைகளை தொழிற்படுத்தி 127 அமைவிடங்களில் ATM வலையமைப்பையும் 48 பண வைப்பு மற்றும் பண மீளெடுப்பு இயந்திரங்களுடன் சேர்த்து லங்கா பே வலையமைப்பின் 3,700 இற்கும் மேற்பட்ட ATM களுடன் இணைந்துள்ளது.

பதிப்பு - 2022 சனவரி